[1978 மார்ச் 27

19-1-1978 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-) 83 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

325. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1974-75 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைக் குறிப்பும் ஆதாய—விரயக் கணக்கும் [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 58/1962)-31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*169. கோரிக்கை எண். 8 தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978—79 (ஆங்கிலம், தமிழ்).

*170. மீனளம் பற்றிய 1978-79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

*171. கூட்டுறவுத் துறையின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*172. கோரிக்கை எண் 6.—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*173. கோரிக்கை எண். 42—செய்தியங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

174. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (296 முதல் 335 வரை).

இணைப்பு I

[. . . 39-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 681-க்கான விடையைக் காண்க.]

(அ) & (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1-6-1971 முதல் ஏற்படுத்தப்பட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் அமைப்பு முறைப்படி, வேளாண்மைக் கல்லூரி மட்டுமல்லாது கால்நடை மருத்துவம், மனையியல், மீன்வளம், வனஇயல் கல்லூரிகளும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அடங்கலாம்.

* 23-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 27

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் கருத்து அரசின் ஆய்வில் இருந்து வந்தது. முதற்படியாக, கால்நடை மருத்துவக் கல்லூரியின் பாடத் திட்டங்கள் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. கால்நடை மருத்துவக் கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் ஒருங்கிணைந்த அங்கமாக ஆக்கப்படவேண்டுமென்று அக்கழகம் கேட்டுக்கொண்டு வந்தது. கால்நடை மருத்துவக் கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முழு அங்கமாக ஆக்கப்படாத வரையில் கால்நடை இயல் வளர்ச்சி அடைய வாய்ப்பில்லை எனவும், தனித்து இயங்கு வது நன்மையை விட தீமையையே பயக்கும் எனவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு பரிந்துரைத்தது. மற்ற மாநிலங் களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அந்தந்த வேளாண்மை பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது போல இம்மாநிலமும் அம்முறையினைப் பின்பற்ற வேண்டுமென அக்குழுவும் மத்திய அரசும் வலியுறுத்தி வந்துள்ளன.

ஒருங்கிணைந்தால் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் உதவித் தொகையை முழுமையாகப் பெற இயலும் என்று தெரி வித்துள்ளது. ஆகவே அரசு, கால்நடை மருத்துவக் கல்லூரியும் மற்றும் அதனைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையங்களும் 1-12-1976 முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றி அதன் ஒருங் கிணைந்த அங்கமாக செயல்பட உத்திரவிட்டுள்ளது. இத்தகைய மாற்றத்தினால் கால்நடைக் கல்விக்கு சுதந்திரமும், ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அதிக வாய்ப்பும் இருக்கும். பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசுப் பிரதிநிதிகள் கால் நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான நிதி வசதிகள் கிடைக்கச் செய்வதுடன் அப்பணிகள் விரிவடை யவும், வளர்ச்சியடையவும் கவனித்துக் கொள்வர்.

மேற்கூறிய காரணங்களினால் முன்பு இருந்ததைப் போல கால் நடை மருத்துவக் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் மீண்டும் இணைக்கும் உத்தேசம் இல்லை.